# <u>சிறைச்சாலைத் திணைக்களத்தில் ஆரம்பநிலை திறன்சேவைப் பிரிவில் (3ஆம் வகுப்பு) புகைப்படக் கலைஞரையும் தொகுப்பாளரையும் பதவிக்கு இணைத்துக் கொள்ளல்</u>

சிறைச்சாலைத் திணைக்களத்தில் ஆரம்பநிலை திறன்சேவைப் பிரிவில் தற்போது வெற்றிடமாகவுள்ள கீழ்க்குறிப்பிட்ட பதவிகளுக்கு தகுதியான இலங்கைக் குடிமக்களான ஆண்களிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பதவிகள்:- 3ஆம் வகுப்பு புகைப்படக் கலைஞர் மற்றும் தொகுப்பாளர்**

| இல. | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | புகைப்படக் கலைஞர் | 01 |
| 02 | தொகுப்பாளர் | 01 |

**02. சம்பள அளவுத்திட்டம்: -** ரூ. 25,790 – 10*270 – 10*300 – 10*330 – 12*350 – 38,990 (PL3 -03/2016). ஊதியங்கள் 25/02/2016 திகதியிடப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 03/2016 இன் அட்டவணை II இற்கு அமைய வழங்கப்படும்.

**03. கல்வி மற்றும் ஏனைய தகுதிகள்**

a. கல்வித் தகுதிகள்:
க.பொ.த (சா/த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத வகையில் இரண்டு திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக ஆறு (06) பாடங்களில் சித்தி எய்தியிருக்க வேண்டும்

b. நிபுணத்துவ தகுதிகள்:
வெவ்வேறு பிரிவுகளின் பணிகளுக்கு உதவி புரியும் மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அடையாளம் காணப்பட்ட பொருத்தமான தொழில்நுட்ப பாடநெறிகளில் தேசிய தொழில் தகைமை மட்டம் 4ஐப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் (சான்றிதழ்கள் மூலம் இது உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

c. அனுபவம்
குறித்த பிரிவுகளில் பெற்றுக் கொள்ளப்பட்ட அனுபவம் மேலதிக தகுதியாக கருத்தில் கொள்ளப்படும்.

d. வயது எல்லை
வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க வயது பதினெட்டு (18) வயதுக்கு குறையாமலும் நாற்பத்தைந்து (45) வயதுக்கு மேற்படாததாகவும் அமைதல் வேண்டும்.

e. பௌதிக உடற்தகுதிகள்
விண்ணப்பதாரிகள்

1. உயரம் - ஆகக் குறைந்த உயரம் ஐந்து (05) அடி, நான்கு (04) அங்குலமாக இருக்க வேண்டும்.

f. ஏனைய தகுதிகள்

i. இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.
ii. நல்ல தேக ஆரோக்கியத்துடன் இருப்பதுடன் மிகச்சிறந்த நன்னடத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும்

iii. நன்னடத்தையின்மை தொடர்பான ஏதாவது குற்றங்களுக்காக ஏதாவது சட்ட நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்டமையானது மேற்குறிப்பிட்ட பதவிக்கான நியமனத்திற்கு தகுதியின்மையாக கருதப்படும்

iv. மேற்குறிப்பிட்ட பதவிக்கு இணைத்துக் கொள்ளப்படுவதற்காக (a) இலிருந்து (f) வரை குறிப்பிடப்பட்ட தகுதிகள் விண்ணப்ப முடிவு திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ எல்லா வகையிலும் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்

**04. பணிக்கமர்த்தும் முறை**

தகுதியான விண்ணப்பதாரிகள் உடற்தகுதி நிபுணத்துவப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையில், காணப்படும் வெற்றிட எண்ணிக்கையைப் போல் இரு மடங்கு எண்ணிக்கையான விண்ணப்பதாரிகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்

**05. பாடத்திட்டம்**

ஒவ்வொரு தொழிற்கல்விக்கும் பொருத்தமான அறிவையும் திறனையும் மதிப்பிடுவதற்காக ஒரு குறித்த காலத்தினுள் நிறைவு செய்வதற்கான பணிகள் ஒதுக்கப்படும்.

**06. நிபுணத்துவப் பரீட்சை**

| பரீட்சையில் புள்ளி வழங்கப்படும் விடயங்கள் | உச்ச புள்ளி | சித்திக்கான புள்ளி |
|---|---|---|
| 1. புகைப்படக் கலைஞர்<br>• புகைப்படக் கருவியை இயக்குதலும் புகைப்படங்கள் எடுத்தலும்<br>• ஒளியமைப்பு வழங்குதலும் நவீன தொழில்நுட்பங்களை உபயோகித்தலும்<br>• தெளிவான புகைப்படங்களை எடுத்தல் | 60<br>20<br>20<br>100 | 40% |
| 2. தொகுப்பாளர்<br>• தொகுப்பாளர் பதவியுடன் தொடர்பான தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி தொகுப்பை மேற்கொள்ளலும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதலும் | 100 | 40% |

(இந்த நிபுணத்துவப் பரீட்சை அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தால் நடாத்தப்படும்)

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை (புகைப்படக் கலைஞர்)

| புள்ளி வழங்கப்படும் பிரதான விடயங்கள் | உச்ச புள்ளி | தெரிவுக்கு கருத்தில் கொள்ளப்படும் ஆகக் குறைந்த புள்ளி |
|---|---|---|
| மேலதிக கல்வி தகுதிகள் | 35 | 40% |
| மேலதிக நிபுணத்துவ தகுதிகள் | 15 | |
| சேவை அனுபவம் | 20 | |
| ஆங்கில மொழிப் புலமை | 10 | |
| கணனி அறிவு | 15 | |
| நேர்முகப் பரீட்சையில் காட்டிய திறமை | 05 | |

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை (தொகுப்பாளர்)

| புள்ளி வழங்கப்படும் பிரதான விடயங்கள் | உச்ச புள்ளி | தெரிவுக்கு கருத்தில் கொள்ளப்படும் ஆகக் குறைந்த புள்ளி |
|---|---|---|
| மேலதிக கல்வி தகுதிகள் | 35 | 40% |
| மேலதிக நிபுணத்துவ தகுதிகள் | 15 | |
| சேவை அனுபவம் | 20 | |
| ஆங்கில மொழிப் புலமை | 10 | |
| கணனி அறிவு | 15 | |
| நேர்முகப் பரீட்சையில் காட்டிய திறமை | 05 | |

- மேலுள்ள அட்டவணையில் காட்டப்பட்ட பிரதான விடயங்களுக்காக வழங்கப்படும் உச்ச புள்ளிகள் அடங்கிய தகைமைகளைப் பரிசோதிக்கும் பரீட்சையில் மேற்கொள்ளப்படும் புள்ளியிடல் விபரங்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் கடிதத்துடன் அனுப்பி வைக்கப்படும்

**07. சேவை விதிகள்**

இந்தப் பதவி நிரந்தரமானதுடன் ஓய்வூதியத்திற்கும் உரித்தானது. எனினும் உமக்கு உரித்தான ஓய்வூதியத்திட்டம் தொடர்பாக அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் கொள்கை தீர்மானத்திற்கு அமைவானதாகும். மேலும் இது விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்திட்டம் / தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கும் பங்களிப்பு வழங்கக்கூடும். பொது சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் 69இலிருந்து 82 வரையான பிரிவுகள் பொருத்தமானவையாகும்.

குறிப்பு:

விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்யப்படும்போது மிகச் சரியான தகவல்கள் வழங்கப்பட வேண்டும். தகுதிகள் பரிசீலிக்கப்படுகையில் ஒரு விண்ணப்பதாரி தகுதியற்றவராகக் காணப்பட்டால் அவரது விண்ணப்பம் எந்த நிலையிலும் இரத்துச் செய்யப்படுவதற்கு இலக்காகும். எந்த வேளையிலும் ஒரு விண்ணப்பதாரி பிழையான தகவல்களை வழங்கினார் என்று கண்டுபிடிக்கப்பட்டால் அவர் அரச சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு உரித்தாவார். விண்ணப்பங்கள் கோரப்படுகையில் மேற்குறிப்பிட்ட தகுதிகள் அனைத்து விடயங்களிலும் பூரணப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

குறித்த விண்ணப்பப் படிவத்திற்கு அமைவான விண்ணப்பப் படிவங்கள் அனுப்பப்பட வேண்டும். இல்லையெனில் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமையாத விண்ணப்பப் படிவங்களும் பூரணமற்ற விண்ணப்பப் படிவங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். சில பகுதிகளைப் பூரணப்படுத்தாமை அல்லது பிழையாக விண்ணப்பப் படிவங்களை நிரப்பியதால் ஏற்படக் கூடிய செலவுகளை விண்ணப்பதாரியே பொறுப்பேற்க வேண்டும்.

‘‘ஆரம்பநிலை திறன்சேவைப் பிரிவிற்கு (3ஆம் வகுப்பு) பதவிக்கு இணைத்துக் கொள்ளல்’’ என்பது விண்ணப்பப் படிவம் உள்ளடங்கிய கடித உறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடப்படுவதுடன் அது சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம், இல. 150, பேஸ்லைன் வீதி, கொழும்பு 09 என்ற முகவரிக்கு …/…/2019இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

H.M.N.C. தனசிங்க
சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம்
சிறைச்சாலைகள் தலைமையகம்
கொழும்பு 09

மாதிரி விண்ணப்பப் படிவம்

**<u>சிறைச்சாலைத் திணைக்களத்தில் ஆரம்பநிலை திறன்சேவைப் பிரிவில் (3ஆம் வகுப்பு) புகைப்படக் கலைஞரையும் தொகுப்பாளரையும் பதவிக்கு இணைத்துக் கொள்ளல்</u>**

| பதவி | விண்ணப்பிக்கும் பதவி |
|---|---|
| புகைப்படக் கலைஞர் | |
| தொகுப்பாளர் | |

(பொருத்தமான கூட்டில் அடையாளமிடவும்)

01. முதலெழுத்துகளுடன் பெயர்: …………………………………………………………

02. முதலெழுத்துகள் குறிக்கும் பெயர்கள்: ……………………………………………….

03. நிரந்தர முகவரி: ………………………………………………………………..

04. 1. நிரந்தர முகவரியுடன் தொடர்பான மாவட்டம்: …………………………………….

2. நிரந்தர முகவரியுடன் தொடர்பான பொலிஸ் நிலையம்: ……………………………

05. தொலைபேசி இல.: வீட்டுத் தொலைபேசி……………………கைபேசி………………….

06. தேசிய அடையாள அட்டை இல

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

07. பிறந்த திகதி:

வருடம் [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

08. விண்ணப்ப முடிவு திகதியில் வயது வருடங்கள்……. மாதங்கள் …….. நாட்கள் ……

09. குடியுரிமை (வம்சாவளியாக /பதிவால்): …………………………

10. திருமண நிலை: …………………..

11. பரீட்சைக்கு தோற்ற விரும்பும் மொழி: …………………………..

12. கல்வித் தகுதிகள் (தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்) க.பொ.த (சா/த) பரீட்சை

| பரீட்சையின் பெயர் | ஆண்டு | சுட்டெண் |
|---|---|---|
| 1ம் முயற்சி………………… | ………….. | …………… |
| 2ம் முயற்சி………………… | ………….. | …………… |

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

13. நிபுணத்துவ தகுதிகள்

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

14. விண்ணப்பதாரி தற்போது தொழில் புரிபவராக இருந்தால்:

i. பதவி :……………………………………..

ii. தொழில் புரியும் இடம் : …………………………………..

iii. நியமனத் திகதி : ……………………………………

15. நீதிமன்றமொன்றால் ஏதாவது குற்றத்திற்காக எப்போதாவது தண்டிக்கப்பட்டுள்ளீர்களா? (ஆம் எனின் விபரங்களை வழங்கவும்)

…………………………………………………………………………………….

16. விண்ணப்பதாரியின் உறுதியுரை:

இந்த விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்ட விபரங்கள் சரியானவையும் உண்மையானவையெனவும், மேலும் என்னால் பிழையான விபரங்கள் வழங்கப்பட்டிருந்தால் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை அறிவேன் என்றும், தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவ்வாறு கண்டறியப்பட்டால் எவ்வித நட்ட ஈடுமின்றி சேவையிலிருந்து விலத்தப்படுவதற்கு உரித்தாவேன் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்

…………………………………

விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி: ………………………

**17. அரச மாகாண அரச சேவையிலிருக்கும் விண்ணப்பதாரிகளுக்கு மட்டும்:**

விண்ணப்பதாரி திரு/திருமதி/செல்வி…………………………………………. இந்த திணைக்களத்தின்/அமைச்சின் நிரந்தர/தற்காலிக/அமைய ஊழியரென்றும் அவர் …./…./20… அன்று பதவிக்கு நியமிக்கப்பட்டவரென்றும் நான் உறுதிப்படுத்துகின்றேன். அவரது வேலையும் நடத்தையும் திருப்திகரமானதென்றும் அவர் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியானவரென்றும் இப் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்கப்பட முடியும்/முடியாது.

………………………………………..

திணைக்களத்தின்/அமைச்சின் பிரதானியின் கையொப்பம்

திகதி: …………………………..